புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635

T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 281 • 16-04-2026 • வியாழன் • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி- புதுச்சேரி

Volum 01 • Issue: 281 • 16-04-2026 • Thursday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy-Puducherry


## இந்திய கடற்படைக்கு 18 அதிநவீன வாட்டர்ஜெட்: நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்து

புதுடெல்லி: ஏப்.16–

இந்திய கடற்படையின் அடுத்த தலைமுறை ஏவுகணை கப்பல் திட்டத்திற்காக, 18 அதிநவீன 'கமேவா' வாட்டர்ஜெட் உந்துவிசை அமைப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நார்வேயைச் சேர்ந்த கோங்ஸ்பெர்க் மேரிடைம் நிறுவனம் பெற்றுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய கடற்படைக்கு தேவையான வாட்டர்ஜெட் கருவிகளை வழங்க நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கமான கப்பல்களில் காணப்படும் விசிறி போன்ற புரொப்பல்லர் அமைப்பிற்கு மாற்றாக, இந்த வாட்டர்ஜெட் தொழில்நுட்பம் நீரை உள்ளிழுத்து, அதிக வேகத்தில் வெளியேற்றுவதன் மூலம் கப்பலை இயக்கும். இதன் மூலம் கப்பல்கள் எதிரிகளின் ரேடார் பார்வையில் படாமல் அதிவேகமாகச் செல்லவும், கடலில் மிக லாவகமாகத் திரும்பவும் முடியும். இந்தக் கப்பல்களைக் கட்டி வரும் கொச்சி கப்பல் கட்டும் தளத்துடன் இணைந்து நார்வே நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொச்சி கப்பல் கட்டும் தளத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ஏற்கனவே பல வர்த்தக ரீதியான திட்டங்களில் இந்நிறுவனம் எங்களுக்கு நம்பகமான கூட்டாளியாக இருந்துள்ளது. இந்த முக்கியத் திட்டத்திற்குத் தேவையான தரமான மற்றும் நுணுக்கமான தொழில் நுட்பக் கருவிகளை அவர்கள் வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்" என்றார்

## ஈரோடு மேற்கு தொகுதியில், திறந்த வேனில் தீவிர தேர்தல் பிரச்சாரம்.. திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி தீவிரம்..



ஈரோடு. ஏப்ரல். 16.

ஈரோடு மேற்கு தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் முத்துசாமி திறந்த வேனில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

தமிழகத்தில் நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் சு. முத்துசாமி தொகுதியில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு உதய சூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டி வருகிறார்.

அந்த வகையில் சூரம்பட்டி 30 வார்டு மற்றும் 49 வது வார்டு பகுதிகளில் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு விகரித்தார்.

அப்போது அவர் அப்பகுதியில் திறந்த வேணில் நின்றபடி பயணித்து உதயசூரன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.

பிரச்சாரத்தின் போது திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உடன் சென்றனர்.

## நிர்மல் குமார் சுரானா நலம் பெற வேண்டி புதுச்சேரி பாஜக சார்பில் தங்கத்தேர் வழிபாடு



புதுச்சேரி: ஏப்.16–

புதுச்சேரி மாநில பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், மணக்குள விநாயகர் கோவிலில் சிறப்புப் பிரார்த்தனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.

பாஜக மாநில பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா விரைவில் முழு உடல் நலம் பெற வேண்டியும், புதுச்சேரி மாநிலத்தில் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைய வேண்டியும் இந்தச் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மணக்குள விநாயகர் கோவிலில் தங்கத்தேர் இழுத்து வழிபாடு செய்யப்பட்டது. முன்னதாக சுவாமிக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முக்கியப் பிரமுகர்களாகப் பின்வருவோர் பங்கேற்றனர்:

நமச்சிவாயம் (மாநில உள்துறை அமைச்சர்), ஏம்பலம் செல்வம் (சட்டப்பேரவைத் தலைவர்),ஜான் குமார் (அமைச்சர்),தீப்பாய்ந்தான் (சட்டமன்ற உறுப்பினர்), மாநில பொதுச் செயலாளர் மோகன் குமார், துணைத் தலைவர்கள் ரத்தினவேலு, அகிலன், அம்மாவாசை, பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில நிர்வாகிகள் ரவிச்சந்திரன், தாமரைச் செல்வி, கோகிலா, ஆசிர்வாத் ரமேஷ், மணிகண்டன், செந்தாமரைக் கண்ணன், சாய் சுதாகர், நாகேஸ்வரன், வெற்றிசெல்வம், நாகராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், மாவட்டத் தலைவர்கள் உலகநாதன், கிருஷ்ணராஜ், அனிதா, சுகுமார் ஆகியோருடன் தொகுதித் தலைவர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

## 'தென் மாநிலங்களுக்கு மாபெரும் வரலாற்று அநீதி' கருப்புக் கொடி போராட்டத்தை அறிவித்த ஸ்டாலின்



சென்னை: "மத்திய அரசு கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை திருத்த மசோதா, தென்மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் மாபெரும் வரலாற்று அநீதி. இதற்கு எதிராக, தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் இன்று (ஏப்.16) நடக்கும்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இந்தியாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குற்றத்துக்காக தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்குத் தண்டனையா?

ஒன்றிய பாஜக அரசு நாளை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தம் தமிழ்நாட்டுக்கும், தென் மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் "மாபெரும் வரலாற்று அநீதி".

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியர் ஒவ்வொருவரும் கொதித்துப் போயிருக்கிறோம். நெருப்போடு விளையாடுகிறது பாஜக.

தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் இன்று நடக்கும்.

தமிழ்நாட்டின் குரலை மதித்து ஒன்றிய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப் பெரிய விலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்! தி.மு.க. தலைவராக, அனைத்துக்கும் மேல் சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்!" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பின்னர் மற்றொரு பதிவில், "நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.

தனிப்பட்ட மனிதர்கள் அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை. எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும் என அழைக்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## "தொகுதிகள் மறுவரை செய்தால் தென்னிந்தியாவின் பலம் மிக குறையும்": ப.சிதம்பரம் விவரிப்பு





ஈரோடு: ஏப்.16–

ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளரும், அமைச்சருமான சு. முத்துசாமியை ஆதரித்து, காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் சூரம்பட்டி யில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: வட இந்தியாவில் பாஜக செல்வாக்கு மிகுந்த கட்சி. நான் மறுக்கவில்லை. ஆனால், அரசியல் சாசனத்தை திருத்தக்கூடாது என்பதற்காக தான் பாஜகவுக்கு வடமாநிலத்தினர் வாக்களித்தனர். எனினும், மூன்றில் இரு பங்கு தரவில்லை. அதனால் அரசியல் சாசனம் பிழைத்தது என நினைத்தோம்.

ஆனால் அரசியல் சாசனத்தை சீரழிக்க விரும்புகிறவர்கள் என்பதை நிருபிக்க நாளை (ஏப்.16) நாடாளுமன்றம் கூடுகிறது. ஐந்து மாநில தேர்தல் நடைபெறும் சமயத்தில் வேண்டுமென்றே நாடாளுமன்றத்தை கூட்டுகின்றனர்.

இதற்கு காங். மூத்த தலைவர் சோனியா காந்தி, திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அந்த கூட்டத்தில் தொகுதிகள் மறுவரை செய்யப்பட உள்ளன. இதில் தென்னிந்தியாவின் பலம் மிக மிக குறையும். வட இந்தியாவின் பலம் கூடும். இது தொடர்பாக பழனிசாமியிடம் கேட்டபோது, 'நான் அமித்ஷாவிடம் கேட்டேன். அவர் பாதகம் வராது என கூறினார். அதனால் தமிழகத்துக்கு பாதகம் வராது' என கூறுகிறார்.

இதற்கு எதற்கு அதிமுக என்ற ஒரு கட்சி. அவர்கள் பெரியார், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவை மறந்துவிட்டனர். பழனிசாமி அடிமை சாசனம் எழுதி கொடுத்துவிட்டார். பொம்மலாட்டத்தில் பழனிசாமி பொம்மை தான். நூலை ஆட்டுபவர் அமித்ஷா தான், என்றார்.

## இந்திய மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது..

### ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் கர்நாடகா துணை முதல்வர் வி. கே. சிவக்குமார் பெருமிதம்



ஈரோடு. ஏப்ரல். 16

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று ஈரோட்டில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கர்நாடகா துணை முதலமைச்சர் வி கே சிவக்குமார் பேசினார்.

தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தங்களின் வேட்பாளர்களை அறிவித்து அவர்கள் தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளராக கோபிநாத் பழனியப்பன் அறிவிக்கப்பட்டு அவர் தொகுதியில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தை செய்து வருகிறார்.

இந்த நிலையில் அவருக்கு ஆதரவாக நேற்று மதியம் பகல் 12 மணி அளவில் ஈரோடு ஆட்சியர் அலுவலகம் அருகே நசியனூர் செல்லும் சாலையில், கர்நாடக துணை முதலமைச்சர் வி கே சிவக்குமார் ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பனை ஆதரித்து கை சின்னத்தில் வாக்குகள் கேட்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசியதாவது..

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. திட்டப் பணிகளை துவக்கி தொடர்ந்து அப்ப பணிகளை சிறப்புடன் செய்து வருகிறது.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நாட்டின் உட்கட்டமைப்பு சாலை மேம்பாடு, போக்கு வரத்து கட்டமைப்பு, விவசாயம், தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குவதாக மத்திய அரசின் ஆண்டு அறிக்கையில் அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அளவிற்கு தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு க ஸ்டாலின் அவர்கள் சிறப்பான முறையில் ஆட்சியை வழிநடத்தி வருகிறார்.

அந்த வகையில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் அமோக வெற்றி பெற்று மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக நிச்சியம் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் வருவார்கள்.

அதோடு ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் நண்பர் கோபிநாத் பழனியப்பன் அவர்களுக்கு கை சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றி பெற செய்ய வேண்டும்.

இதன் மூலம் நான் இதற்கு முன்பு சொல்லி அது போல் தமிழகத்தில், மீண்டும் தொடர்ந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக ஆட்சி அமைய வேண்டும் அண்ணன் மு க ஸ்டாலின் முதலமைச்சராக வரவேண்டும்.

அதற்காக திமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அவரவர் சின்னத்தில் வாக்காளர்கள் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு கர்நாடக மாநில துணை முதலமைச்சர் வி கே சிவகுமார், ஈரோட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசினார்.

## ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம்..
# மணப்பாறை ஜமீன் கொடி குமார் சாந்தி நேரில் ஆதரவு..




ஈரோடு. ஏப்ரல் 16

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பனை ஆதரித்து மணப்பாறை ஜமீன் குடும்பத்தை சேர்ந்த கொடி குமார் சாந்தி தம்பதியினர் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்து. பொது மக்களிடம் ஆதரவு திரட்டினர்.

ஈரோடு மாவட்டம் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடும் கோபிநாத் பழனியப்பன் தொகுதியில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் அவரை திருச்சி மணப்பாறை ஜமீன் சாந்தி மற்றும் அவரது கணவர் ஈரோடு திமுக பிரமுகர் கொடிக்குமார் ஆகியோர் பிரச்சாரத்தில், நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தொடர்ந்து காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத பழனியப்பனுக்கு ஆதரவாக தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்தனர்.

மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகளை ஒருங்கிணைத்து மணப்பாறை ஜமீன் சாந்தி குடி குமார் தொகுதியில் தீவிர பிரச்சாரம் செய்து கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

# வாக்கு சாவடி மையம் ஆட்சியர் ஆய்வு



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்கு சாவடியை மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருமான ச. கந்தசாமி நேரில் ஆய்வு செய்தார்.

# காட்டகரம் ஊராட்சி: குடிநீருக்காக மைல் கணக்கில் நடக்கும் பொதுமக்கள் தீர்வு காண கோரிக்கை!



கிருஷ்ணகிரி. ஏப்.16–

கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டகரம் ஊராட்சிக்குட்பட்ட பட்டகப்பட்டி கிராமத்தில் கடந்த சில வாரங்களாகக் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் அன்றாடத் தேவைகளுக்காகக் கூட தண்ணீரின்றி மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

முக்கியப்பிரச்சனைகள்:

வறண்ட ஆழ்துளைக் கிணறுகள்: கிராமத்தில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்ததாலும், சில இடங்களில் மின்மோட்டார் பழுது காரணமாகவும் குடிநீர் விநியோகம் முற்றிலு மாகத் தடைபட்டுள்ளது.

மைல் கணக்கில் பயணம்: ஒரு குடம் தண்ணீருக்காகப் பொதுமக்கள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் முதியவர்கள், விளைநிலங்களில் உள்ள கிணறுகளுக்கும், அண்டை கிராமங் களுக்கும் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதாரச் சுமை: வேறு வழியின்றி பலர் அதிக விலை கொடுத்து டிராக்டர்கள் மூலம் தண்ணீர் வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது, இது கூலி வேலைக்குச் செல்லும் சாமானிய மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

பொதுமக்கள் கோரிக்கை:

இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். “குடிநீர் என்பது அடிப்படைத் தேவை. அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு பழுதடைந்த மோட்டார்களைச் சீரமைக்க வேண்டும் அல்லது லாரிகள் மூலம் தடையின்றி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்“ என பட்டகப்பட்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேர்தல் விழிப்புணர்வு - உலக சாதனை கோலமிடுதல் நடைபெற உள்ளது

## திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல் :

திருவள்ளூர் ஏப் 16 : தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026, 23 ஏப்ரல் அன்று நடைபெறவுள்ளதையொட்டி “தேர்தல் திருவிழா, தமிழ்நாட்டின் பெருவிழா” எனும் முழக்கத்துடன் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பான பல ஏற்பாடுகளை செய்து வருகிறது. தேர்தல் செயல்பாடுகளின் முக்கியமான ஒரு அங்கமாக தேர்தல் விழிப்புணர்வு SVEEP நடவடிக்கைகளின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் சமூகத்தின் பல தரப்பினரையும் உள்ளடக்கி நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்த “My Vote, My Right, My Voice” என்ற நோக்கத்துடன் இந்தியாவிலேயே முதன்மாதிரியாக ஒவ்வொரு வாக்குச்சாவடி அளவில் ஒரே நாளில் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் 4016 வாக்குச்சாவடிகளில் ஒவ்வொன்றிலும் மகளிர் சுயஉதவிக் குழுவினரால் பல்வேறு வண்ணங்களில் குறைந்தபட்சம் 3 கோலங்கள் அதிகபட்சம் 5 கோலங்கள் என்ற அடிப்படையில் சுமார் 20,000 கோலங்களை குறுகியகாலத்தில் பல்வேறு இடங்களில் சுமார் 25,000 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு வரைந்து “உலக சாதனை நிகழ்த்த” திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட உலக சாதனை நிகழ்வு 2026 ஏப்ரல் 16 ஆம் நாளில் திருவள்ளூரில் தேர்தல் விழிப்புணர்வு நோக்கத்துடன் பல இடங்களில் ஒரே நேரத்தில் குழுவாக அதிகமான கோலங்கள் உருவாக்கப்பட்டது என்ற சாதனை எலைட் வேர்ல்ட்ரெக்கார்ட்ஸ் மற்றும் இந்தியன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் பதிவு செய்யப்பட்டு தமிழன் புக் ஆப் ரெக்கார்ட் அங்கீகாரம் பெறப்படவுள்ளது என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# சாத்தூர் அருகே ஆம்னி பஸ் பைக் மோதல்; பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலி:

## நள்ளிரவில் டீ குடிக்க சென்றபோது சோகம்

சாத்தூர்: ஏப்.16–

சாத்தூர் அருகே, நேற்று நள்ளிரவு ஆம்னி பஸ் பைக் மோதிய விபத்தில் பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பரிதாபமாக பலியாகினர். இந்த சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள பேர்நாயக்கன்பட்டியை சேர்ந்தவர் செல்வம் மகன் கோகுல் (17). இவர், சிவகாசியில் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் பிளஸ் 2 படித்து பொதுத்தேர்வு எழுதி முடிவுக்காக காத்திருந்தார். இந்நிலையில், கோகுலின் செல்போன் பழுதானதால், அதனை சரிபார்ப்பதற்காக உறவினரின் பைக்கில் நேற்று பிற்பகல் சிவகாசிக்கு சென்றார். அங்கு செல்போன் கடையில் பழுது நீக்க தனது போனை கொடுத்தார்.

கடைக்காரரர், செல்போன் பழுதை சரிசெய்ய அதிக நேரமாகும் என கூறியதால், கோகுல் அங்கிருந்து புறப்பட்டு சிவகாசியில் தன்னுடன் படித்த வகுப்பு தோழர்கள் சீனிவாசன் மகன் பிரசன்னா (17) மற்றும் யுவராஜ் (17) ஆகியோரை சந்தித்தார். பின்னர், கோகுல் தனது நண்பர்களுடன் இரவு 9 மணியளவில் செல்போன் கடைக்குச் சென்று, பழுது நீக்கிய செல்போனை பெற்று கொண்டார். இதையடுத்து நண்பர்கள் மூவரும் நீண்ட நேரம் பேசி கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. பின்னர் நள்ளிரவு 11.45 மணியளவில் டீ குடிப்பதற்காக ஒரே பைக்கில் 3 பேரும், சாத்தூர்கோவில்பட்டி நான்கு வழிசாலையில் சென்று கொண்டிருந்தனர். போக்குவரத்து நகர் அடுத்த காட்டுபள்ளிவாசல் பகுதியில் எதிரே வந்த தனியார் ஆம்னி பஸ், பைக் மீது மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த மாணவர்கள் 3 பேரும் சம்பவ இடத்திலேயே அடுத்தடுத்து உயிரிழந்தனர். தகவலறிந்து சாத்தூர் தாலுகா போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இறந்த 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து குறித்து தகவல் அறிந்த 3 மாணவர்களின் பெற்றோரும், உறவினர்களும் சாத்தூர் மருத்துவமனையில் குவிந்து கதறி அழுதது காண்போரை கண்கலங்க செய்தது. டூவீலர் மீது ஆம்னி பஸ் மோதி பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலியான சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கோட்டை பக்த ஆஞ்சநேயர் கோயிலில் வில்லிசை நிகழ்ச்சி..!




வந்தவாசி, ஏப் 16:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயிலில் தமிழ் வருடப் பிறப்பையொட்டி சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்றது. மேலும் செந்தமிழ் வில்லிசை குழு சார்பில் நாலாயிர திவ்வியப் பிரபந்த வில்லிசை நிகழ்ச்சி புலவர் மா.ரகுபதி குழுவினரால் நடைபெற்றது. மேலும் இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## Format C-7

**Information regarding individuals with pending criminal cases, who have been selected as candidates, along with the reasons for such selection, as also as to why other individuals without criminal antecedents could not be selected as candidates.**

(As per the Commission's directions issued in pursuance of the Order dated 13.02.2020 of the Hon'ble Supreme Court in contempt petition (C) No. 2192 of 2018 in WP(C) No. 536 of 2011

Name of the Political Party : AANAITHINDHIYA JANANAYAGA PATHUKAPPU KAZHAGHAM
Name of the Election : Tamil Nadu Legislative Assembly 2026
Name of State/UT : Tamil Nadu
(01) Name of the Constituency : 70 – Gingee
Name of the Candidate : **N.PERUMAL**

| SI.NO | | |
|---|---|---|
| 01. | Criminal antecedences | |
| | a. Name of the Offenccs | U/S. 191(2),296(b),351(2). |
| | b. Case No. | Cr.No. 435/2025, Tindivanam-PS |
| | c. Name of the Court | Not teken on file |
| | d. Whether Charges hav e bee framed or not ( Yes/No ) | NO |
| | e. Date of conviction, if any | Not applicable |
| | f. Details of punishment undergone, if any | Not applicable |
| | g. Any other information required to be givan | Referred by police |
| 02. | The reasons for the selection of the candidate, selection shall be with reference to the qualification achievement and merit of the candidate, and not mere WINNABILITY at the polls ( not more than 100 words) | The candidate has built a very good public image as a social worker, who focuses on protecting the interest of the people. He has gained the trust of the public through his consistent service and by implementing welfare measures that directly benefit the constituency. |
| 03. | Reason as to why other individuals without ceiminal anr]tecedents could not be selected as candidate (not more than 100 words) | With a proven track record of dedicated service to the public, the candidate has carned strong goodwill among the people He serves |

In the case of election to council of state or election to legislative council by MLAs, mention the election concerned in place of name of the Constituency.

**N.MURALIDHARANN**
Party Advocates' Wing Secretary
AANAITHINDHIYA JANANAYAGA PATHUKAPPU KAZHAGHAM

# புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், சமூக நீதியின் முன்னோடி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 136வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி



புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், சமூக நீதியின் முன்னோடி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 136வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம் அவர்கள் தலைமையில், அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. இதில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், சட்டப்பேரவை தலைவர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் தீபாய்ந்தான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மாநில பட்டியல் அணி தலைவர் காத்தவராயன், மாநில பொதுச் செயலாளர் மோகன் குமார், மாநில துணைத் தலைவர்கள் ரத்தனவேல், அகிலன், அம்மாவாசை, மாநில செயலாளர்கள் தமிழ் மாறன்,கோகிலா ஆகியோர் உட்பட பல்வேறு அணி தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதேபோல், அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியிலும், மாநில பட்டியல் அணி தலைவர் திரு காத்தவராயன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் அம்பேத்கர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பொதுச் செயலாளர்கள் வீரமுத்து, வின்னரசன், துணைத் தலைவர் வீரப்பன், செயலாளர்கள் பொன். ஆறுமுகம், கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், ஏராளமான பொதுமக்களும் பங்கேற்றனர்.

# சென்னையில் ரூ.56.50 லட்சம் பறிமுதல்

சென்னை: ஏப்.16–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து தேர்தல் பறக்கும் படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதனடிப் படையில் நேற்று பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையின்போது பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் ரூ.1,39,500, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் ரூ.66,000, அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியில் ரூ.99,500, மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையின் போது, திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் ரூ.62,000 என மொத்தம் ரூ.3,67,000 ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மேலும், ரயில்வே காவல்படையினர் சோதனையின் போது, துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் ரூ.7,50,000 ரொக்கபணமும், 289 கிராம் தங்கம் சுமார் ரூ.44,83,257 மற்றும் 1000 கிராம் போதைப் பொருள் மதிப்பு ரூ.50,000 என மொத்தம் ரூ.52,83,257 மதிப்பிலான ரொக்கப் பணம், தங்கம் மற்றும் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## படிவம் C-1
## குற்றவியல் வழக்குகள் தொடர்பான உறுதிமொழி

(நீதிப்பேராணை விண்ணப்ப (சிவில்) எண்.536/2011 இல் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 25.09.2018 நாளிட்ட தீர்ப்புரையின்படி (பொதுநல அறக்கட்டளை மற்றும் பிறர் Vs. இந்திய அரசு மற்றும் பிறர்)

வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி : **R.குமரன்,**
எண்:230, S.R. நகர், வராகி கோவில் தெரு,
சாலாமேடு, விழுப்புரம் நகரம் & மாவட்டம்,
தமிழ்நாடு–605 401.

அரசியல் கட்சியின் பெயர் : **தமிழக வாழ்வுரிமை கட்சி**

தேர்தலின் பெயர் : தமிழக சட்டமன்ற தேர்தல் (2026)

தொகுதியின் பெயர் : விழுப்புரம்

**R.குமரன்** ஆகிய நான் மேற்குறிப்பிட்ட தேர்தலுக்கான வேட்பாளர் என்ற வகையில் என் மீதுள்ள குற்றவியல் முன் நிகழ்வுகள் தொடர்பான விவரங்களை பொதுத்தகவல்களுக்காக அளிக்கிறேன்.

**(அ) நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குகள்**

| வரிசை எண். | நீதிமன்றத்தின் பெயர் | வழக்கு எண் மற்றும் தேதி | வழக்கு(கள்) நிலை | தொடர்புடைய வழக்கின்/ வழக்குகளின் சட்டப்பிரிவுகள் மற்றும் குற்றம் / குற்றங்கள் தொடர்பான சுருக்க விவரம் |
|---|---|---|---|---|
| 1. | Judicial magistrate No.1 Villupuram (C.C.No. 156/23) | Cr.No.167/18 Vikravandi P.S. | நிலுவையில் உள்ளது | U/S 147, 188, 141, IPC, NFT. |
| 2. | Judicial magistrate No.1 Villupuram (C.C.No. 156/23) | Cr.No.31/15 Villupuram Taluk P.S. | நிலுவையில் உள்ளது | U/S 341, 353, 506 (i) IPC, PT. |
| 3. | Judicial magistrate No.1 Villupuram (C.C.No. 156/23) | Cr.No.467/11 Villupuram Town P.S. | நிலுவையில் உள்ளது | U/S 147, 294(b), 323, 506 (ii) IPC– PT. |
| 4. | Judicial magistrate No.1 Villupuram (C.C.No. 156/23) | Cr.No.167/23 Villupuram West P.S. | நிலுவையில் உள்ளது | U/S 294(b), 323, 506 (ii) IPC– PT. |



புதுச்சேரியில் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் விழா துணைநிலை ஆளுநர் கைலாசநாதர் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி மற்றும் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் , பாஜக மாநில தலைவர் மற்றும் பாஜக நிர்வாகிகள்,எதிர்க்கட்சி தலைவர் சிவா காங்கிரஸ் தலைவர் வைத்தியலிங்கம் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் தீ கா கட்சி நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டு புதுச்சேரி சட்டசபை அருகே உள்ள அம்பேத்கர் அவர்களின் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# புதுச்சேரி அரியாங்குப்பத்தில் வழக்கறிஞர் அரவிந்த் மோகன் அலுவலகம் திறப்பு:
## முன்னாள் முதல்வர் நாராயணசாமி திறந்து வைத்தார்



புதுச்சேரி, ஏப்.16–

புதுச்சேரி அரியாங்குப்பம் ஸ்ரீநிவாசா நகரில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அரவிந்த் மோகன் அவர்களின் புதிய சட்ட அலுவலகம் நேற்று (14.04.26) கோலாகலமாகத் திறக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளராகப் புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் நாராயணசாமி கலந்து கொண்டு, ரிப்பன் வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அரியாங்குப்பம் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஜயலட்சுமி ஜெயமூர்த்தி, அரியாங்குப்பம் காங்கிரஸ் ஜோசப், மற்றும் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த காக்காயன்தோப்பு சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வழக்கறிஞர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் திறப்பு விழாவில் ஏராள மான வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.வழக்கறிஞர்கள் ஏ.வி. ராமலிங்கம், நாராயண குமார். மருதுபாண்டி, பிரதீஷ் இருதயராஜ்,கார்த்திகேயன். சோமசுந்தரம்,பிரேம்குமார், சச்சிதானந்தம் மற்றும் அரவிந்தன். ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார் மேலும்

இந்நிகழ்வில் புதுவை மாநில தேவர் பேரவை நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

பேரவைத் தலைவர் குணசிங் தலைமையில், அருணகிரி, பொற்செழியன், ராம்குமார், சங்கய்யா மற்றும் பேரவையின் முக்கிய பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வின் இறுதியில் வழக்கறிஞர் அரவிந்த் மோகன் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# புதுச்சேரியில் கொளுத்தும் கோடை வெயில்:

* மாணவர்களின் நலன் கருதி கோடை விடுமுறையை நீட்டிக்கக் புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்கள் கூட்டமைப்பு கோரிக்கை

புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் கடுமையாக அதிகரித்து வருகிறது.

அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே வெப்பத்தின் அளவு இயல்பை விட அதிகமாக பதிவாகி வருவதால், பொதுமக்கள் மற்றும் குறிப்பாக பள்ளிச் செல்லும் சிறுவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகுவார்கள் என பெற்றோர்கள் அச்சப்படுகின்றனர். தற்போது புதுச்சேரி சட்டசபை தேர்தல் மற்றும் கோடை விடுமுறை காரணமாகப் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தாலும், வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் வெயிலின்



தாக்கம் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் நிலவிய கடும் வெப்பம் காரணமாகப் பள்ளிகள் திறப்பதை முந்தைய ஆண்டுகளில் அரசு தள்ளி வைத்ததைப்போல, இந்த ஆண்டும் கூடுதல் விடுமுறை அளிக்க வேண்டும் எனப் பெற்றோர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

முக்கிய கோரிக்கைகள்: வெப்ப அலை தாக்கம்:

* மதிய நேரங்களில் அனல் காற்று வீசுவதால் மாணவர்களுக்கு நீர்ச்சத்து குறைபாடு மற்றும் மயக்கம் போன்ற உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

விடுமுறை நீட்டிப்பு:

* புதுச்சேரி கல்வித்துறையின் தற்போதைய கல்வி நாட்காட்டியின்படி கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், வெயிலின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு இந்த விடுமுறையை ஜூன் இரண்டாவது வாரம் வரை நீட்டிக்க வேண்டும்.

பெற்றோர்கள் எதிர்பார்ப்பு: * அண்டை மாநிலமான தமிழகத்திலும் இதே போன்ற கோரிக்கைகள் எழுந்துள்ள நிலையில், புதுச்சேரி அரசும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் விரைவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

நன்றி இவண்

பரமேஸ்வரி, சஞ்சய் குமார்

(மாநில தலைவர்கள்)

புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்கள் கூட்டமைப்பு



அம்பேத்கரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள் சென்னையில் உள்ள தனது இல்லத்தில், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்.

# புதுச்சேரி: தேர்தல் முன்விரோதம்? பெண் காவலர் மீது கார் ஏற்றி கொலை முயற்சி : வேட்பாளர் பரபரப்பு புகார்!



புதுச்சேரி: ஏப்.16–

புதுச்சேரியில் சுயேச்சை வேட்பாளரின் சகோதரியும், பெண் தலைமை காவலருமானவர் மீது கார் ஏற்றி கொலை செய்ய முயன்ற சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரியாங்குப்பம் ராதாகிருஷ்ணன் நகரைச் சேர்ந்த ஆ. ரகு (எ) ரகுநாதன், நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டவர். தேர்தலில் போட்டியிட்டதால் ஏற்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, தனது தங்கை மீது திட்டமிட்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ரகுநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று (14.04.2026) மதியம் சுமார் 1 மணி அளவில், ரகுநாதனின் தங்கை சிவசங்கரி (தலைமை காவலர்) அவர்கள் ராதாகிருஷ்ணன் நகரில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த செழியன் என்பவர், சிவசங்கரி மீது தனது காரை மோதி அவரைக் கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்.

புகார் அளிப்பவர்: ஆ. ரகுநாதன் (சட்டமன்றத் தேர்தல் சுயேச்சை வேட்பாளர்).

குற்றம் சாட்டப்பட்டவர்: திரு. செழியன்.

பாதிக்கப்பட்டவர்: சிவசங்கரி (தலைமை காவலர்).

காரணம்: தேர்தல் போட்டி மற்றும் அரசியல் முன்விரோதம்.

இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பாக ரகுநாதன் அரியாங்குப்பம் காவல் நிலையத்தில் எழுத்துப்பூர்வமாக புகார் அளித்துள்ளார். "சரியான பாதையில் சென்றுகொண்டிருந்த என் தங்கையை வேண்டுமென்றே கார் ஏற்றி கொல்ல முயன்ற நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அந்தப் புகாரில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே இந்த விபத்தின் சிசிடிவி காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், தற்போது இது 'அரசியல் உள்நோக்கம் கொண்ட கொலை முயற்சி' என புகார் அளிக்கப்பட்டிருப்பது புதுச்சேரியில் பரபரப்பை மேலும் அதிகரித்துள்ளது. போலீசார் இது தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புரட்சியாளர் டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களின் 136 வது பிறந்தநாள் விழா தேசிய மக்கள் முன்னணி புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் பெரும் விமர்சையாக கொண்டாடப்பட்டது



புதுச்சேரி லெனின் வீதி சந்திப்பில் பாபாசாகிப் அவர்களின் அலங்காரங்களுடன் திருஉருவப்படத்தை அமைத்து நூற்றுக்கும் மேற்பட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்பு அம்பேத்கர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு முன்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது

அங்கிருந்து வாகனத்தில் ஊர்வலமாக சென்று மிஷின் வீதி மாதா கோவில் அருகில் ஒன்று கூடி பேரணியாக சட்டப்பேரவை அருகில் உள்ள பாபாசாகிப் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்துவிட்டு கடற்கரை சாலையில் உள்ள அம்பேத்கர் மணி மண்டபத்தில் மலர் அஞ்சலி மற்றும் மரியாதை செய்யப்பட்டது

மதியம் 12 மணி அளவில் லெனின் வீதி சந்திப்பில் ஏழை எளிய மக்களுக்கு அருஞ்சுவை உணவு வழங்கப்பட்டது

இந்த நிகழ்விற்கு தேசிய மக்கள் முன்னணி நிறுவன தலைவர் சீ.சு.சுவாமிநாதன் தலைமை தாங்க பொதுச் செயலாளர் இன்னாசி ராக், சிவா துணைத் தலைவர் ஜெபின லாசரஸ், ராஜேஷ் பொருளாளர் சுரேஷ் செயலாளர்கள் தில்லை ஆறுமுகம், ரெஜினா டேவிட் ஜோசப், இவோன் சுவாமிநாதன் இணைச் செயலாளர்கள் சதீஷ், மணிவண்ணன்,வினிதா, மஞ்சுளா, உள்ளிட்டோரும் புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் தலைவர்கள் சஞ்சய் குமார், பரமேஸ்வரி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கெடுத்தனர்




# ஏப்ரல் 23ம் தேதி கோயம்பேடு
## காய்கறி சந்தைக்கு முழு விடுமுறை!!

சென்னை: ஏப்.16–

சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 23ம் தேதி கோயம்பேடு காய்கறி சந்தைக்கு முழு விடுமுறை அறிவிக்கப்படுவதாக கோயம்பேடு அனைத்து வியாபாரிகள் சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு சங்கம் தெரிவித்துள்ளது

# காவிரி உபரி நீரை மாயனூரில் இருந்து கண்ணூத்து மற்றும் மருங்கி குளத்திற்கும் கொண்டு வந்து மணப்பாறை தொகுதிக்கு தண்ணீர் பஞ்சத்தை தீர்ப்பேன்

## அதிமுக வேட்பாளர் டாக்டர் விஜயகுமார் பிரசாரம்





மணப்பாறை ஏப்.16

மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் காவிரி உபரி நீரை மாயனூரில் இருந்து கண்ணூத்து மற்றும் மருங்கி குளத்திற்கும் கொண்டு வந்து மணப்பாறை தொகுதிக்கு தண்ணீர் பஞ்சத்தை தீர்ப்பேன்

மேலும் தற்போது நிலவும் குடி நீர்பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைப்பேன் என்று கூறி அதிமுக வேட்பாளர் டாக்டர் விஜயகுமார் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்

மணப்பாறை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் விஜயகுமார் மருங்காபுரி தெற்கு ஒன்றிய பகுதிகலான அதிகாரம் சொரியம் பட்டி முத்துப்பட்டி, வழையபட்டி செவந்தம் பட்டி, மருதம் பட்டி தவசிப்பட்டி களத்தூர், தெத்தூர், மலையாண்டி கோவில்பட்டி களத்துப் பட்டி உசிலம்பட்டி மான் மாஞ்சான்பட்டி அம்மா பட்டி சீகம்பட்டி, காலனி நாட்டார் பட்டி, லக்கையநா யக்கன்பட்டி, ஆலம்பட்டி வடக்கம் பட்டி இடைய பட்டி தளவாய்பட்டி சத்திரப் பட்டி அழகாபுரி பழையபாளையம் = வடுகபட்டி அக்கியம் பட்டி தாதப்பட்டி அண்ணா நகர் ராமையாபுரி கிருஷ்ணாபுரம் ராமையாபுரி பாலர் பட்டி, பீரங்கி மேடு, இக்கரை கொசு குறிச்சி, மலம்பட்டி, லிங்கம் பட்டி, அண்ணா நகர், பிடாரப் பட்டி, செவல்பட்டி,

கவுண்டம்பட்டி மேலூர் அம்மாபட்டி அண்ணா நகர் கரடிப்பட்டி ராசிப்பட்டி கஞ்சநாயக்கன் பட்டி முத்துப்பட்டி செட்டிய பட்டி தெற்கு எல்லைக்காட் டுப்பட்டி மஞ்சம்பட்டி காரைப் பட்டி வடகாட்டுப் பட்டி ஆகிய பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு அதிமுக வேட் பாளர் டாக்டர் விஜயகுமார் வாக்குகள் சேகரித்தார்.

பிரச்சாரத்தின்போது கழக அமைப்புச் செயலாளர் டி இரத்தினவேல் முன்னாள் எம்எல்ஏக்கள் சந்திரசேகர், சின்னச்சாமி வக்கீல் திருமூர்த்தி திருமலை சாமிநாதன்

கல்லுப்பட்டி ராமமூர்த்தி பழனியப்பன் மாணிக்கம் பழைய பாளையம் கிருஷ்ணன் சின்னு கவுன்சிலர் மணியங்குறிச்சி ஸ்ரீதர் கருமலை வெங்க டேஷ் தமிழ் மாநில காங்கி ரஸ் சார்பில் பொன்னுச்சாமி கண்ணன் பாரதிய ஜனதா கட்சி மற்றும் கூட்டணிக் கட்சி நிர் வாகிகள் உடன் சென்றனர்.

பிரச்சாரத்தின் போது மணப்பாறை சட்டமன்றத்தொகுதிக்கு காவிரி உபரி நீரை மாயனூரில் இருந்து கண்ணூத்து மற்றும் மருங்கி குளத்திற்கும் கொண்டு வந்து மணப் பாறை தொகுதிக்கு தண்ணீர் பஞ்சத்தை தீர்ப்பேன்

தொகுதியில் உள்ள அடிப்படை வசதி கள் கழிப்பிட வசதி, சாலை வசதி மருத்துவ வசதி ஆகியவற்றை செய்து தருவேன் என்றும் தொகுதியில் நில வும் வேலை வாய்ப்பு பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுத்து அதை தீர்க்க முயற்சி செய்வேன் எனவாக்குறுதி அளித்து பிரச்சாரம் மேற்கொண்ட அதி முக வேட்பாளர் டாக்டர்விஜ யகுமார் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேக ரித்தார்

பழைய பாளையத்தில் வேட்பாளர் டாக்டர் விஜயகுமார் அவர்களுக்கு ஊர் மக்கள் சார்பில் தாரை தப்பட்டைகள் முழங்க வெடி வெடித்து சிறப்பான வரவேற்பு தந்தனர் மேலும் கிராம மக்கள் எம் ஜி ஆர் சிலை அருகே வேட்பாளரை தோளில் சுமந்து உற்சாகமாக இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்

# சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் தபால் வாக்குகள் செலுத்தும் பணி தொடங்கியது!!

சென்னை: ஏப்.16–

சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் தபால் வாக்குகள் செலுத்தும் பணி தொடங்கி நடந்து வருகிறது. தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தபால் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி மையத்தில் தபால் வாக்கு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

### சொன்னதை செய்யும் அரசு திராவிட மாடல் அரசு

# மணப்பாறையில் அரசு மருத்துவமனைக்கு 10 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டம் பெற்று தந்த எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தாருங்கள்

## தேர்தல் பரப்புரையில் திமுக கூட்டணி வேட்பாளர் ப.அப்துல் சமத் பேச்சு





மணப்பாறை, ஏப்.16–

சொன்னதை செய்யும் திராவிட மாடல் ஆட்சியில் மணப்பாறைக்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் தந்த எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தாருங்கள் என திமுக கூட்டணி வேட்பாளர் ப அப்துல் சமத் தேர்தல் பரப்புரை

தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் மதச்சார்பற்ற திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்கள் தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி மனித நேய மக்கள் கட்சி வேட்பாளர் ப அப்துல் சமத் இரண்டாவது முறை யாக இதே தொகுதியில்களம் காண்கிறார்

தொடர்ந்து மணப்பாறை வையம்பட்டி மருங்காபுரி துவரங்குறிச்சி உள்ளிட்ட ஒன்றியங்களில் தினம்தோறும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் கிராமம் கிராமமாக சென்று கடந்த ஐந்து ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி திட்டங்கள் குறித்தும் செய்த சாதனைகள் குறித்தும் வாக்காளர்கள் மத்தியில் விளக்கிப் பேசி தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்

வையம்பட்டி ஒன்றியம் அஞ்சல் காரன் பட்டியில் காலை பிரச்சாரத்தை துவங்கிய வேட்பாளர் அப்துல் சமத் இளங்காகுறிச்சி அயன் ரெட்டியபட்டி குமாரவாடி தொப்பநாயக்கன்பட்டி வளையப்பட்டி சடையம் பட்டி உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுட்டரிக்கும் வெயிலிலும் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்

தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட திமுக கூட்டணி கட்சி வேட்பாளர் ப அப்துல் சமத் பேசியதாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளில் வையம்பட்டி ஒன்றிய பகுதியில் பல்வேறு கிராமங்களில் நிழற்குடை நீர்நிலை தேக்க தொட்டி அங்கன்வாடி கிராம சாலை பாலங்கள் ரேஷன் கடை உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக சட்டமன்ற உறுப்பினராக சிறந்த முறையில் செய்து மீண்டும் மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப் பட்டுள்ளேன் இன்னும் பல மக்கள் நலத்திட்டங்களை வையம்பட்டி ஒன்றியங்களில் செயல்படுத்திட மீண்டும் ஒருமுறை வாய்ப்பு தாருங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று சுட்டரிக்கும் வெயிலில் வாக்காளர்கள் மத்தியில் தீவிர வாக்கு சேகரித்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்

குமாரவாடி ஊராட்சியில் தேர்தல் பரப்புரைக்கு வந்த திமுக கூட்டணி கட்சி வேட்பாளர் ப அப்துல் சமத் அவர்களுக்கு பூரண கும்ப மரியாதையுடன் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர் கூட்டத்தில் குடியிருந்த மக்கள் வேட்பாளர் ப அப்துல் சமதுக்கு சிறப்பான வரவேற்பு தந்தனர் மேலும் வேட்பாளர் ப அப்துல் சமத் பேசுகையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்கு சிறப்பாக செய்துள்ளது குறிப்பாக பள்ளி குழந்தைகளுக் காலை உணவு திட்டம் தந்து தாய்மார்களின் வேலைப்பளுவை குறைத்து பெண்கள் போற்றக்கூடிய ஆட்சியாக நடத்திக் காட்டியவர் தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

மீண்டும் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி அமைய நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து மீண்டும் என்னை சட்டமன்றத்திற்கு அனுப்புங்கள் வையம்பட்டி பகுதியில் உள்ள அனைத்து சாலைகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்துவேன் என்று வாக்குறுதி கொடுத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார்

### மணப்பாறை தொகுதியில் மக்கள் நல திட்டங்கள் பல தந்து வளர்ச்சியான தொகுதியாக மாற்றிக்காட்டுவேன்.

# கிராமத்து பாணியில் பிரச்சாரம் செய்யும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ரா. கதிரவன் தங்களது குடும்ப உறவு போல பேசுவதாக நினைத்து வியப்புடன் பார்த்த பொதுமக்கள்







திருச்சி. ஏப்.16–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் தினம்தோறும் சுட்டெரிக்கும் வெயில் என்றும் பாராமல் கிராமம் கிராமமாக சென்று தமிழக வெற்றி கழக வேட்பாளர் ரா. கதிரவன் தீவிர தேர்தல் பரப்புரை செய்து வருகிறார்

நேற்று மருங்காபுரி ஒன்றியம் இரட்டியபட்டி தொட்டியபட்டி கோவில் பட்டி இடையபட்டி தாதகவுண்டம்பட்டி ஆமணக்கம்பட்டி வீரா கோவில் பட்டி கன்னி மேட்டுப்பட்டி கன்னி வடுகப்பட்டி சுக்காம் பட்டி நல்லமநாயக்கன் பட்டி சீல்நாயக்கன்பட்டி கார்வாடி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் நேற்று தேர்தல் பரப்புரை மேற்கொண்டு விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்

தேர்தல் பரப்புரைக்கு வருகை தந்த தமிழக வெற்றி கழக வேட் பாளரை சுக்காம்பட்டி எல்லையில் பொதுமக்கள் பூரண கும்ப மரியாதை உடன் பட்டாசு வெடித் தும் மேளதாளங்கள் முழங்க வரவேற்றனர்.

சுக்காம்பட்டியில் தேர்தல் பரப்புரை மேற்கொண்ட தமிழக வெற்றி கழக வேட்பாளர் ரா. கதிரவன் பேசியதாவது:

மருங்காபுரி ஒன்றிய பகுதிகளில் பல்வேறு கிராமங்களில் தற்போது நிலவும் குடிநீர் பிரச்சனை சாலை வசதி தொடர்ந்து இருந்து வருகிறது இத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இதுவரை இந்த சுக்காம்பட்டிக்கு எந்தவித அடிப்படை தேவைகளும் செய்து கொடுக்காமல் இருந்து வருகின்றனர்.

இந்த முறை இளைஞன் ஆகிய எனக்கு ஒரு முறை வாய்ப்பு தாருங்கள் நிச்சயம் சுக்காம்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான டாக்டர்கள் இல்லாமல் மிருந்த சிறமத்தில் நமது மக்கள் உள்ளனர் நமது ஆட்சியில் 24 மணி நேரமும் சுழற்ச்சி முறையில் மருத்துவர்களை நியமித்து மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் மேலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்த மருத்துவமனையில் ஸ்கேன் சென்டர் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவை உருவாக்குவேன்

இதே போல் இந்த பகுதியில் உப்பு குடிநீர் உள்ளதால் பல்வேறு மக்களுக்கு கிட்னி சம்பந்தமான நோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் நான் என் சொந்த செலவில் சுக்காம்பட்டி முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவேன்

மேலும் அரசு பள்ளியில் பயின்று வரும் மாணவிகள் கழிவறை இன்றி மிகுந்த சிரமத்திற்கு தள்ளப்பட்டு வருகின்றனர் அவர்களுக்கு ஆட்சிக்கு வந்த மூன்றே மாதத்தில் உடனடியாக கழிவறை கட்டிக் கொடுக்கப்படும்

இதேபோல் சுக்காம் பட்டி அரசு பள்ளியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் இருந்து வருகின்றனர் நிச்சயம் போதுமான அளவிற்கு ஆசிரியர்கள் நியமனம் செய்ய முயற்சி மேற்கொள்வேன்

கால்நடை வளர்ப்பவர்களுக்கு வசதியாக ஆவின் பாலகம் அமைக்கப்படும்

நமது சுக்காம்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு பள்ளி விடுதியில் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் மாணவ மாணவிகளை பாது காக்கும் பாதுகாவலர்கள் நியமனம் செய்யப்படு வார்கள்

ஏற்கனவே இருந்து வரும் அங்கன்வாடி கட்டிடம் மோசமடைந்துள்ள நிலையில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தரப்படும் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை வாக்காளர்கள் மத்தியில் வழங்கி இந்த முறை மணப்பாறைக்கு மாற்றம் தேவை எனவே மாற்றத்தை நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் மத்தியில் விசில் சின்னத்திற்கு வாக்கு கேட்டு வந்துள்ளேன் உங்கள் வீட்டுப் பிள்ளையாக உங்களில் ஒருவனாக ஒரு படித்த இளைஞனுக்கு நீங்கள் வாக்களித்து ஒரு முறை சட்டசபை அனுப்புங்கள் நிச்சயம் மக்களின் மனம் அறிந்து அவர்களின் தேவை அறிந்து உங்களுக்காக உழைப்பேன் ஒருமுறை வாய்ப்பு தாருங்கள் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் கதிரவனின் இந்த கிராமத்து பாணியிலான பிரச்சாரம் தொகுதி மக்களை வெகுவாக கவர்ந்து வருகிறது.

# சேலம், ஏற்காடு தொகுதியில் 15 ஆண்டுகளாக நிறைவேறாத அரசு கல்லூரி கோரிக்கை??

சேலம். ஏப்.16–

சேலம் மாவட்டம்,ஏற்காடு பழங்குடியினர் தொகுதியின் முக்கியப் பகுதியான வாழப்பாடியில், அரசு கலை, அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென,15 ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் நிறைவேற்றப்படவில்லை என இப்பகுதி மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

சேலம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சேலத்தில் இருந்து 30 கி.மீ., தொலைவில் உள்ள வாழப்பாடி பேரூராட்சி, வருவாய் வட்டம் மற்றும் காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின் வாரியம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் உட்கோட்ட தலைமையிடமாக விளங்கி வருகிறது.

ஏற்காடு தொகுதியின் மையப் பகுதியான வாழப்பாடி, சேர்வராயன் மலையின் வடகிழக்கு பகுதி மலைக் கிராமங்கள், அருநூற்றுமலை, கல்வராயன் மலை, ஜம்பூத்துமலை, நெய்யமலை, மண்ணூர் மலை மற்றும் தருமபுரி மாவட்டம் சேலூர், வேலனூர், நாமக்கல் மாவட்டம் மங்களபுரம், திம்மநாயக்கன்பட்டி உள்பட 200 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் முக்கிய மையமாக விளங்குகிறது.


வாழப்பாடி, பேளூர், கருமந்துறை, அருநூற்றுமலை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் 30க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பள்ளிகளில் இருந்து ஆண்டுதோறும் 12ஆம் வகுப்பு முடித்து, இளநிலை கலை, அறிவியல் பட்டம் பயில விரும்பும் சுமார் 10 ஆயிரம் கிராமப்புற மாணவ, மாணவிகள் சேலம், ஆத்தூர், ராசிபுரம், தலைவாசல், திருச்செங்கோடு பகுதியில் உள்ள அரசு, தனியார் கல்லூரிகளுக்கே செல்ல வேண்டிய நிலை தொடர்ந்து வருகிறது.

இதனால், இப்பகுதி மாணவர்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக, கிராமப்புறங்களில் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ள, பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் உயர்கல்வி எண்ணம் நிறைவேறாமல் போகிறது. எனவே, அவர்களின் நலன்கருதி, வாழப்பாடியில் அரசு கலை, அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இந்நிலையில், 2013 இடைத்தேர்தல் மற்றும் 2016, 2021 தேர்தல்களின்போதும், வாழப்பாடியில் அரசு கலை, அறிவியல் கல்லூரி அமைக்கப்படும் என, பிரதான அரசியல் கட்சிகள் வாக்குறுதி அளித்தன. ஆனால், கல்லூரி அமைப்பற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

வாழப்பாடியை அடுத்த முத்தம்பட்டி ஊராட்சி, அமணாக்கரடு பழத்தோட்டத் தரிசு நிலம், வாழப்பாடி கொட்டவாடி சாலை மற்றும் மங்கம்மாநகர் பகுதியிலும், சிங்கிபுரம் ஊராட்சி மேலக்காடு மேய்ச்சல் தரிசு நிலப் பகுதிகளிலும் கல்லூரி அமைப்பதற்கு தேவையான அளவிற்கு அரசு நிலங்கள் உள்ளன.

எனவே, நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெறும் ஏற்காடு தொகுதி உறுப்பினர், எந்த கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும், புதியதாக அமையும் அரசுடன் பேசி, வாழப்பாடியில் அரசுக் கல்லூரி அமைக்கும் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என, இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



ஈரோடு மாவட்டம், பவானி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட தேர்தல்அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்றுவாக்குச்சாவடிகளில்பணியாற்றவுள்ள அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கான தபால் வாக்கு செலுத்தும் வசதி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA**, on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421